**ஊழியர் சேமலாப நிதியம் - 2024**
**--------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊழியர் சேமலாப நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவு கூற்று அங்கத்தவர்களின் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்கதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் யாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுககுரிய தகவல்களும் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்ககான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து சேமலாப நிதியத்தின் நிதிக்கூற்றுக்களானது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இலங்கை கணக்காய்வு நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிதியத்தை தொடர்ந்து செயற்படுத்தும் இயலுமையை தீர்மானித்தல், முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் நிதியத்தை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுலப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதானது அவை தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் இல்லாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் எண்ணத்தில் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துரணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டிற்காக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்த தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரம் கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களுக்காக பெறுமானத் தேய்வினை கணிக்கும் பட்டோலையின் பிரகாரம் முழுமையாக பெறுமானத் தேய்வினை மேற்கொண்டு முடிவடைந்த சொத்துக்களின் பெறுமதியானது தொழில் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பானவை முறையே ரூபா 696 மில்லியன் மற்றும் ரூபா 160 மில்லியனாகும். அச்சொத்துக்களுக்கு மத்தியில் இன்னும் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களை அடையாளங்கண்டு இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களுக்கான வினைத்திறனான ஆயுட்காலத்தினை மீளாய்வு செய்யாமையால் ஏற்பட்ட மதிப்பீட்டுத் தவறினை இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் பிரகாரம் சரிசெய்வதற்கும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாத சொத்துக்களை பொருத்தமான வகையில் கைதவிர்ப்புச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்து முடிவடைந்த நிலையான சொத்துக்களுக்காக கணக்கீட்டு நிமயங்களுக்கு இணங்க சரி செய்வதற்கும் தேவைப்பாட்டின் அடிப்படையில் நடைமுறையற்ற சொத்துக்களின் வினைத்திறனான ஆயுட்காலத்தினை மீளாய்வு செய்து அந்த கணக்கீட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் சொத்துக்களின் நிதிப் பெறுமதியை அறிக்கையிடுவதற்கும் தேவையான கொள்கை ரீதியான நடவடிக்கை எடுப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நிமயங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தினால் பேணப்பட்டு வந்த 09 வங்கி கணக்குகள் தொடர்பாக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரித்த வங்கி கணக்கிணக்க கூற்றுக்களின் பிரகாரம் 2001 ஆம் ஆண்டிலிருந்து 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதி தொடர்பாக காசேட்டில் பதிவுசெய்யப்பட்ட எனினும் வங்கி கூற்றிலில் பதிவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள், மதிப்பிழந்த காசோலைகள், நேரடி வரவுகள்/ செலவுகள், கணனி கணக்கீட்டு குறைபாடுகளாக 2006 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்ட மீதி, வைப்புச் செய்யப்பட்ட போதிலும் தேறப்படாத காசுக் கட்டளைகள் மற்றும் காசோலைகள், வழங்கப்பட்ட போதிலும் பணமாக மாற்றப்படாத காசோலைகள் என்பனவாக செம்மையாக்கப்பட்டதன் பின்னர் தேறிய மீதியில் மொத்தமாக ரூபா 3,900 மில்லியன் தீர்த்துவைக்கப்படாத மீதியாகக் காணப்பட்டது. அவற்றில் ரூபா 1,581 மில்லியன் தேறிய மீதியானது 2025 சனவரி மாதம் வரையும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்துவைப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நீண்டகாலமாக காணப்பட்டு வரும் இந்த வங்கி கணக்குகளின் கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்துவைப்பதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மோட்டார் வாகனங்களின் கிரயம் ரூபா 97.20 மில்லியனும் திரண்ட பெறுமானத் தேய்வு ரூபா 56.09 மில்லியனும் தேறிய பெறுமதி ரூபா 41.11 மில்லியனும் ஆகும். இந்த மீதிகள் 2018 ஆம் ஆண்டிலிருந்து மாற்றமின்றி நிதிக் கூற்றுக்களில் காணப்படுவதனால் 2018 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 41.11 மில்லியன் தொகையான மோட்டார் வாகனங்கள் பெறுமானத் தேய்வுக் கணிப்பீட்டிற்காக ஈடுபடுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | தற்பொழுது ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டுள்ள சொத்துக்கள் சம்பந்தமாக திணைக்களத்தின் அனைத்து வாகனங்களினதும் பதிவுசெய்தல் புத்தகங்களைப் பரீட்சித்துப் பார்த்து திணைக்களம் கொள்வனவு செய்தவைகளை அடையாளம் கண்டதன் பின்னர் கொடுப்பனவு தகவல்களைப் பரீட்சித்து கொள்வனவுக் கிரயத்தை அடையாங்காண்பதற்கும் அதற்கிணங்க இந்த வித்தியாசத்தை சரிசெய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியத்தின் நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு செய்யும் கொள்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மோட்டார் வாகனங்களின் கிரயம் ரூபா 97 மில்லியனாகும். கணக்காய்விற்கு வழங்கிய | திணைக்களத்தின் அனைத்து வாகனங்களையும் அடையாளங்கண்டு மேற்கூறிய வாகனங்களின் கொள்வனவு செய்யும் செலவு விடயத்திற்கு | நிதியளிக்கப்படுகின்ற அனைத்து சொத்துக்களும் நிதியத்தின் நிதி நிலைமை கூற்றில் |

| | | | |
|---|---|---|---|
| | மென்பொருளுக்கு இணங்க நிதியத்திடம் காணப்பட்ட மோட்டார் வவாகனங்களின் எண்ணிக்கை 23 ஆகும். அதன் கிரயம் மொத்தமாக ரூபா 75 மில்லியனானதுடன் ரூபா 22 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | இணங்க அல்லது ஒப்படைத்தலுக்கு இணங்க சரியான வாகனங்களின் எண்ணிக்கையை நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கலாம். தற்பொழுது வாகங்களின் உள்ளபடியான கிரயத்தினை சிகாஸ் முறைமையின் மூலம் அடையாளங்காணக்கூடியதாக உள்ளதுடன் அனைத்து ஆவணங்களிலும் இந்த வாகனங்களை அடையாளங்கண்டு சரிசெய்தலினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளடக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ‘‘செயற்பாட்டு இல்லத்தின் உள்ளக வடிவமப்பினை தயார்படுத்தலின் முடிவுறாத வேலைகள்’’ கணக்கில் உள்ள ரூபா 298 மில்லியன் மீதியானது அலுவலக பொருத்திகளாக மூலதனமாக்கப்பட்டு பெறுமானத் தேய்வு செய்தல் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படவில்லை. | முடிவுறாத வேலைக் கணக்கினைப் பரீட்சித்து உள்ளபடியான நிலையான சொத்துக்களை அடையாளங்கண்டு எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்கள் பயன்படுத்தக்கூடிய முடியாத நிலைமைக்கு வந்த திகதியிலிருந்து மூலமும் பெறுமானத் தேய்வும் கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். |

**1.5.3 கணக்கிணக்கம் செயயப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை**

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி (ரூபா மில்) | துணை அறிக்கைகின் பிரகாரம் பெறுமதி (ரூபா மில்) | வித்தியாசம் (ரூபா மில்) | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| அங்கத்துவ கணக்கின் மீதியில் உள்ளடக்கப்பட்ட 05 உப கணக்குகளின் மீதிகள் | 92,069 | 43,907.6 | 48,162 (இதில் ரூபா 15,447 மில்லியனான அடையாளங்காணப்படாத வித்தியாசம் காணப்பட்டது. | தனித்தனி கணக்குகள் காசு அடிப்படையில் பேணப்படுவதுடன் பொதுப் பேரேட்டில் கொடுக்கல் வாங்கல்கள் அட்டுறு அடிப்படையில் அறிக்கையிடப்படுகின்றது. இதன் காரணமாக இந்த இரண்டு முறைமையில் ஏதாவது ஒரு திகதியில் காணப்படுகின்ற மீதியில் சுயமாகவே ஒரு வித்தியாசம் காணப்பட்டது. இரண்டு முறைமையிலும் | கணக்கிணக்க கூற்றுக்களின் மூலம் இன்னும் காணப்படாத மீதிகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| | அங்கத்துவர் கணக்கு மீதியில் ஏற்படுகின்ற நாளாந்த கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடுதலினை உறுதிப்படுத்தும் வகையில் நாளாந்தம் இந்த இரண்டு முறைமையின் கணக்குகள் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளன. |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) தொழில் திணைக்களத்தின் சுற்றறிக்கை | | | |
| (i) 1999 பெப்ரவரி 11 ஆந் திகதிய 01/99 ஆம் இலக்க தொழில் திணைக்களத்தின் சுற்றறிக்கை | (அ) 2022 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக ஜா-எல மாவட்ட தொழில் அலுவலகத்தில் நிறுவன பரீட்சிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு மிகைக் கட்டணம் மற்றும் பங்களிப்பு பணத்தை அறவீடு செய்யும் ஆரம்ப அறிவித்தலினை வழங்கி இறுதி அறிவித்தலினை அனுப்புவதற்கு 22 நாட்களிலிருந்து 1250 நாட்கள் வரையான காலம் எடுத்திருந்த 101 சந்தர்ப்பங்கள் தொடர்பாக தொழில் தருனர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 142,822,152 நிலுவையான பங்களிப்பு பணமும் உரிய மிகைக் கட்டணமும், இரத்தினபுரி மாவட்ட தொழில் அலுவலகம் தொடர்பாக 21 நாட்களிலிருந்து 406 நாட்கள் வரையான காலம் எடுத்திருந்த 111 சந்தர்ப்பங்கள் தொடர்பாக | நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கான அறிவித்தல் தயாரிக்கப்பட்டதன் பின்னர் நிறுவனத்தின் மூலம் மத்திய வங்கிக்கு நேரடியாக பணத்தை செலுத்துதல், வழங்கப்பட்டுள்ள விலாசம் பிழையானதாக இருத்தல் என்பவற்றின் காரணமாக முதலாவது அறிவித்தலை திரும்ப பெற்றுக்கொள்ளல், வழங்கப்பட்டுள்ள D 66 அல்லது C அறிக்கைகளில் அங்கத்துவ பெயர் மற்றும் இலக்கம் பிழையாக இருத்தல் நிறுவனத்தின் விலாசம் பெயரினை திருத்த வேண்டி ஏற்படல் ஆகிய விடயங்களின் | பங்களிப்பு பணத்தையும் மிகைக் கட்டணத்தையும் அறவீடு செய்வதற்கான அறிவித்தலினை தாமதமின்றி அனுப்புதல் மற்றும் உரிய நடவடிக்கை எடுத்தலின் மூலம் அங்கத்தவர்களுக்கு சிறப்பான சேவையை நிறைவேற்றுதவ் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 66,455,624 நிலுவையான சேமலாப நிதியமும் உரிய மிகைக் கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | காரணமாக இத்தாமதம் ஏற்பட்டுள்ளது. | |
| | | (ஆ) மிகைக் கட்டணம் மற்றும் பங்களிப்பு பணத்தை அறவீடு செய்வதற்கான முதலாவது அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தும் இரத்தினபுரி மாவட்ட தொழில் அலுவலகத்தினால் அறவிட வேண்டிய ரூபா 7,518,257 இற்காக 32 சந்தர்ப்பங்களின் போதும் மத்திய கொழும்பு மாவட்ட தொழில் அலுவலகத்தினால் அறவிட வேண்டிய ரூபா 79,229,959 தொகை தொடர்பாக 15 சந்தர்ப்பங்களின் போதும் இறுதி அறிவித்தல் வழங்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ii) | 2000 பெப்ரவரி 10 ஆந் திகதிய 6/2000 ஆம் இலக்க தொழில் திணைக்கள சுற்றறிக்கையின் 1(IV) ஆம் பிரிவு | நிதியத்தின் கண்காணிப்பு தரவு முறைமையின் பிரகாரம் ஜா-எல தொழில் அலுவலக அதிகாரப் பிரதேசம் தொடர்பாக 2024 செப்தெம்பர் 20 ஆந் திகதியில் உள்ளவாறு செயற்படுகின்ற நிறுவனங்கள் 5,199 மற்றும் செயற்பாடற்ற/ மூடப்பட்ட நிறுவனங்கள் 1159 எண்ணிக்கையும் இரத்தினபுரி மாவட்ட தொழில் அலுவலக அதிகாரப் பிரதேசம் தொடர்பாக செயற்படுகின்ற நிறுவனங்கள 4,322 எண்ணிக்கையும் செயற்படாத.்.மூடப்பட்ட நிறுவனங்கள் 851 எண்ணிக்கையும் ஆகும். நீண்ட காலமாக பரீட்சிப்பிற்கு உட்படாத நிறுவனங்கள் பரீட்சிப்பிற்காக தெரிவுசெய்யப்பட வேண்டுமென சுற்றறிக்கையின் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தும் 2015 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வுத் திகதி வரை மேற்கூறிய நிறுவனங்களுக்கு மத்தியில் முறையே 1093 மற்றும் 1166 நிறுவனங்களுக்காக மாத்திரம் நிறுவன பரீட்சிப்புக்கள் | ஒரு தொழில் உத்தியோகத்தரினால் ஒரு மாதத்திற்கு 20 நிறுவனங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட நிறுவனங்கள் பரீட்சிக்கப்படுவதுடன் அந்த நிறுவனங்களுக்கு மத்தியில் செயற்படாத 05 நிறுவனங்கள உதவி தொழில் ஆணையாளரினால் பரீட்சிப்பதற்காக வழங்கப்படுகின்றன. இப்பரீட்சிப்புக்களின் போது பெற்றுக்கொள்ளப்படுகின்ற அறிக்கைகள் கணனி முறைமைக்கு உள்ளடக்கப்படாமை இதற்கு காணரமாக உள்ளது. | நீண்ட காலமாக பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்படாத நிறுவனங்களில் பரீட்சிப்புக்களை மேற்கொண்டு அங்கத்தவர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஒட்டுமொத்த நிறுவன அளவில் 83 சதவீதம் மற்றும் 78 சதவீதங்களுக்காக பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியத்தின் 15 ஆம் பிரிவு | (அ) | ஏதாவது ஒரு நிறுவனத்தின் ஊழியர்களுக்குரிய பங்களிப்பு பணமானது ஒவ்வொரு மாதமும் முடிவடைந்து அடுத்துவரும் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் ஜா-எல, இரத்தினபுரி மற்றும் மத்திய கொழும்பு தொழில் அலுவலக அதிகார எல்லைக்குரிய பதிவுசெய்யப்பட்ட முறையே 1,104, 631 மற்றும் 06 நிறுவனங்கள் பதிவுசெய்யப்பட்ட திகதியிலிருந்து பங்களிப்பு பணத்தை செலுத்தியிருக்கவில்லை. இது சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவுசெய்த நிறுவனங்ளில் பங்களிப்பு பணத்தை செலுத்தாதுள்ள நிறுவனங்களை அயைடாளங்கண்டு தொழில் உத்தியோகத்தரினூடாக பின்தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பின்தொடர் நடவடிக்கையிைக முறைமைப்படுத்துதல் வேண்டும். |
| | | (ஆ) | ஜா-எல மற்றும் இரத்தினபுரி தொழில் அலுவலக அதிகாரப் பிரதேசத்தை சார்ந்த பதிவுசெய்துள்ள நிறுவனங்களுக்கு மத்தியில் நிதியத்திற்கு 2005 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக பங்களிப்பு பணத்தை செலுத்தாத முறையே 1924 நிறுவனங்கள் மற்றும் 1689 நிறுவனங்கள் அடையாளங்காணப்பட்டதுடன் அந்த நிறுவனங்கள் தொழில் உத்தியோகத்தரினால் காலரீதியாக பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 511,063 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 479,040 மில்லியனாகும். அதற்கிணங்க செயற்பாட்டு விளைவுகளில் ரூபா 32,023 மில்லியன் முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. நிதியத்தின் வட்டி வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 12,709 மில்லியனால் அதிகரித்தமையும் நிதிசார் உபகரணங்களின் நியாயமான பெறுமதியினை செம்மையாக்கியதன் மூலம் ரூபா 17,806 இலாபம் அடையாளங்காணப்பட்டமையும் இந்த முன்னேற்றத்திற்கு காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிர்மாணிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஹோட்டல் கட்டிடத் தொகுதிக்காக 2013 ஆம் ஆண்டின் போது பட்டியல் படுத்தப்படாத கம்பனிகளில் பங்குகளாக ரூபா 5,000 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் முதலீடு செய்யப்பட்டு 11 ஆண்டுகள் கடந்திருந்தும் அந்த ஹோட்டல் கட்டிடத் தொகுதியை நிர்மாணிக்கும் நடவடிக்கை இன்றுவரை ஆரம்பிக்கப்படாததன் காரணமாக முதலீட்டிலிருந்து எந்த பிரதிபலனும் நிதியத்திற்கு கிடைக்கவில்லை. | நிதி பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் கீழ் காணப்படுகின்ற அரசாங்க நிறுவனங்களை மறுசீரமைப்புச் செய்யும் பிரிவினால் 2023 ஆம் ஆண்டின் ஒக்தோபர் மாதத்தின் போது கம்பனிகளை விற்பனை செய்வதற்காக முதலீட்டாளர்களிடமிருந்து விருப்பினை வெளிப்படுத்துதல்கள் கோரப்பட்டிருந்ததுடன் அவற்றிற்கு மத்தியில் 06 இந்திய மற்றும் இலங்கை கம்பனிகள் 2024 பெப்ரவரி மாதம் வரை தமது பிரேரணைகளைச் சமர்ப்பிப்பதற்காக தகமைகளைப் பெற்றிருந்தனர். ஊழியர் சேமலாப நிதியத்தினால் அரசாங்க நிறுவனங்களை மறுசீரமைப்புச் செய்யும் நடைமுறையின் கீழ் இந்த முதலீட்டினை விற்பனை செய்வதற்கு பொதுத்திறைசேரியுடன் கலந்துரையாடல் நடைபெற்றது. எவ்வாறாயினும் பின்னர் இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு பதில் கிடைத்திருக்கவில்லை. | ஆபத்து குறைவான சிறந்த முதலீடுகளை மேற்கொள்ள வேண்டியதுடன் முதலீடு செய்த பணத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவு செய்யாது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் சபையில் மாத்திரம் பதிவுசெய்திருந்த ஊழியர்களின் எண்ணிக்கை 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 22,764 ஆக இருந்ததுடன் அந்த தொழில் தருனர்களிடமிருந்து அத்திகதியில் | ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்திற்கு உட்படுகின்ற தொழில் தருனர்களை அடையாளங்கண்டு அவர்களிடமிருந்து நிறுவனம் அமைந்துள்ள பிரதேசத்திற்குப் பொறுப்பான தொழில் உத்தியோகத்தர்களினூடாக | இரண்டு நிறுவனங்களுக்குமிடையேயான சிறந்த ஒருங்கிணைப்பின் மூலம் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிதியத்தில் பதிவு செய்யப்பட |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளவாறு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் சபைக்கு கிடைத்திருந்த பங்களிப்பு பணத்தின் மொத்தம் ரூபா 505 மில்லியனாகும். அவற்றில் ஊழியிர் 01 இற்கும் 10 இற்கும் இடையே இருக்கின்ற நிறுவனங்கள் 22,246 ஆக இருந்ததுடன் ஊழியர்கள் 10 இற்கும் 254 இற்கும் இடையே இருக்கின்ற நிறுவனங்கள் 518 ஆக இருந்தது. அதற்கிணங்க தொழில் தருனர்களுக்கு மத்தியில் நிதியத்தில் பதிவுசெய்ய வேண்டி இருந்த பதிவு செய்யத் தவறியுள்ள தொழில் தருனர்களை அயைடாளங்கண்டு பதிவுசெய்வதற்காக சபையுடன் தொடர்பு கொண்டு பொருத்தமான ஒரு வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த தொழில் தருனர்களை ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வேண்டிய நிறுவனங்களைப் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நிதியத்தின் வங்கி கணக்கிணக்க கூற்றுக்களில் 2001 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் கணக்கிணக்கம் செய்யப்படாத வங்கி கணக்கு மீதிகளைத் தீர்த்துவைப்பதற்காக 2020 சனவரி 09 ஆந் திகதி ஒரு தனியார் நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை செய்த திதகியிலிருந்து 08 வாரங்களுக்குள் இறுதி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் உரிய செயற்திட்டத்தின் எதிர்பார்த்த குறிக்கோள்கள் இந்த அறிக்கைத் திகதி வரையும் அடைந்துகொள்ளப்பட்டிருக்கவில்லை. 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் உடன்படிக்கை செய்த பணத்தில் 50 சதவீதம் அதாவது ரூபா 1.5 மில்லியன் செலுத்தப்பட்டது. | தொடக்கத்தில் திட்டமிடப்பட்ட நடைமுறையில் உருவாகிய சிக்கல்களின் காரணமாக எதிர்பார்த்த காலத்திற்குள் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கு முடியாதிருந்ததுடன் அதற்காக புதிய அணுகுமுறை கடைப்பிடிக்கப்பட்டு தற்பொழுது தரவுகள் குறித்த அளவிற்கு வழங்கப்பட்டு 2006 இலிருந்து 2017 வரையான மீதிகளைத் தீர்த்து வைக்கும் இயலுமை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பிரதான வங்கி கணக்குகளில் காணப்படுகின்ற பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும். |

## 3.2 செற்பாட்டு செயற்றினின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் அங்கத்துவ கணக்கில் ‘‘தொழில் ஆணையாளர் நாயகம்’’ என்ற பெயரில் காணப்பட்ட கணக்கில் தொழில் தருனருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டதன் மூலம் அறவிட்டு இலங்கை மத்திய வங்கியில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள ரூபா 13,393 மில்லியன் பணம், தொழில் திணைக்களத்தின் பொது வைப்புக் | ‘‘சீ’’ அறிக்கையின்றி அனுப்பிவைக்கப்பட்ட பங்களிப்பு பணத்தைப் போல பூரணமற்ற அல்லது முறண்பாடுகளுடனான ‘‘சீ’’ அறிக்கையுடன் அனுப்பிவைக்கப்பட்ட பங்களிப்பு பணம் காணப்படல் முதலிய பல்வேறு காணரங்களின் அடிப்படையில் இந்த மீதிகளை | தீர்த்துவைக்கப்படாத பங்களிப்பு பணத்தை துரிதமாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கில் நிறுத்திவைக்கப்பட்ட ரூபா 388 மில்லியன் பணம், ‘‘நடைமுறை ஆண்டிற்கான பங்களிப்பு பணம் இலக்கம் 01’’ என்ற பெயரிலான கணக்கில் காணப்பட்ட ரூபா 74,849 மில்லியன் மீதி, பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அங்கத்தவர்களுக்குச் செலுத்தாது நிறுத்திவைக்கப்பட்ட பிரதிபலன் மற்றும் உரிமை கோரப்படாத பிரதிபலன்களாக காணப்பட்ட ரூபா 1,074 மில்லியன் மீதி, பற்றாக்குறை அல்லது மிகையான பங்களிப்பு பணமாகக் காணப்பட்ட ரூபா 2,753 மில்லியன் மீதி, பற்றாக்குறையான அல்லது மிகையான பிரதிபலன் கொடுப்பனவாகக் காணப்பட்ட ரூபா 514 மில்லியன் மீதி என்பவை கிடைக்க வேண்டிய அங்கத்தவர்களை அடையாளங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>மேலே குறிப்பிட்ட அங்கத்தவர் கணக்குகளுக்கு செலவுவைக்காது காணப்படுகின்ற கணக்குகளை துரிதமாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 2013, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது அரசாங்க கணக்குகள் குழுவினாலும் பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது. | தனித்தனி கணக்குகளுக்கு செலவு வைக்கையில் சிக்கல்கள் காணப்பட்டன.<br>இந்த மீதிகளைத் தீர்த்துவைப்பதற்காக அங்கத்தவர் பெயர்கள் மற்றும் இலக்கங்களின் முரண்பாடுகளுடனான பங்களிப்பு பண விபரமான அறிக்கை தொடர்பாக தொழில் தருனர்களுக்கு தெரியப்படுத்துதல், தவறுகளுடனான ‘‘சீ’’ அறிக்கைக்காக முழுப்பணத்தின் மீது 02 சதவீத மிகைக் கட்டணம் விதித்தல், வீதி முறைமையினூடாக பண விபர அறிக்கைகளைச் சேகரித்தல், சுயமாகவே அங்கத்தவர் கணக்குகளை நாளதுவரையாக்கும் நடைமுறையை அறிமுகப்படுத்துல் முதலிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | |
| (ஆ) | ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவுசெய்துள்ள அனைத்து தொழில் தருனர் நிறுவனங்களும் மாவட்ட தொழில் அலுவலகத்திற்கு மற்றும் தொழல் உத்தியோகத்தருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு அவ்வப்போது கண்காணிப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் 2024 நவம்பர் 22 ஆந் திகதி ஊழியர் சேமலாப நிதியத்தின் கண்காணிப்பு தரவு முறைமையின் பிரகாரம் தொழில் திணைக்களத்தின் 24 வலயங்கள் தொடர்பாக நிதியத்தில் பதிவுசெய்த 81,987 இற்கு மேற்பட்ட அளவிலான தொழில் தருனர் நிறுவனங்கள் உப வலயங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் அவற்றில் 76,306 நிறுவனங்கள் செயற்படுகின்ற நிறுவனங்களாகவும் 7,335 நிறுவனங்கள் செயற்பாடற்ற நிறுவனங்களாகவும் அவதானிக்கப்பட்டன. அந்த செயற்படுகின்ற நிறுவனங்களில் 631 நிறுவனங்களுக்கு மாத்திரம் தொழில் உத்தியோகத்தர்கள் பெயரிடப்பட்டிருந்தும் 75,675 நிறுவனங்களுக்கு அவ்வாறு தொழில் உத்தியோகத்தர்கள் | தொடக்க காலத்தில் உப வலய குறியீடு உள்ளடக்கப்படாது பதிவுசெய்யப்பட்ட அனைத்து நிறுவனங்களினதும் (பழைய D பத்திரத்தினையும் உள்ளடக்கி) உப வலயங்கள் தொடர்பான தகவல்ளை கண்காணிப்பு தகவல் முறைமைக்கு உள்ளடக்குவது உரிய தொழில் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என அப்போது நடைபெற்ற பதிவிநிலை உத்தியோகத்தர் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களின் போது தெரியப்படுத்தப்பட்டிருந்த போதிலும் பல்வேறு காணரங்களினால் அந்த நடவடிக்கையை பூரணப்படுத்துதல் இடம்பெறவில்லை என அவதானிக்கப்பட்டது.<br>மேலும் நிறுவன பட்டியலை நாளதுவரையாக்குவதற்காக பதிவுசெய்யப்படாத | தகவல்களை நாளதுவரையாக்கி அங்கத்தவர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பெயரிடப்படாமையின் காரணமாக அந்த நிறுவனங்கள் தொடர்பாக கண்காணிப்பு இடம்பெறவில்லை என அவதானிக்கப்பட்டது. | நிறுவனங்களை பதிவுசெய்வதற்காக செயற்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க நடவடிக்கை எடுத்து மேலும் இந்த நிறுவன பட்டியலை நாளதுவரையாக்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | |

**3.3 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.5 மற்றும் 3.6(இ)(ii) ஆம் பிரிவின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டில் டோனர்களைக் கொள்வனவு செய்யும் போது அவற்றினை பயன்படுத்துகின்ற அச்சு இயந்திர சேவை உடன்படிக்கைகளின் நிபந்தனைகளுக்கு இணங்க அது தொடர்பான டோனர்களை முகவர் நிறுவனங்களின் மூலம் நேரடி முறைமையின் அடிப்படையில் கொள்வனவு செய்வதற்காக விலை மனுக்கள் கோரப்பட வேண்டி இருந்த போதிலும் விலை மனுக்கள் கோரும் போது அந்த முகவர் நிறுவனங்களை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கொள்வனவு செய்தலானது சந்தை விலை ஒப்பீட்டு முறைமையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உத்தரவாத காலத்தினுள் காணப்படுகின்ற அச்சு இயந்திரங்களுக்காக உரிய முகவர் நிறுவனங்களிடமிருந்து டோனர்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய இயந்திரங்களை தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் சிறப்பாக திட்டமிடப்படுதல் வேண்டும். அங்கத்துவ நிதியிலிருந்து செலவு செய்யும் போது வினைத்திறனாக நிதியை பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.3.2 மற்றும் 5.3.4(ஆ) பிரிவுகளின் பிரகாரம் பெறுமதி சேர் வரி (VAT) பதிவுசெய்தல் சான்றிதழ்களின் ஒரு பிரதியை பேட்பு மனுக்களுடன் சமர்ப்பிக்க வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டின் போது அதற்காக பதிவுசெய்யாத இரண்டு வழங்குனர்களிடமிருந்து 550 அலகுகள் கொண்ட 06 வகையான டோனர்கள் ரூபா 7,507,500 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே பொருட்களை வழங்குவதற்காக முறையான அதிகாரம் கேள்வி மனுதாரர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என சுட்டிக்காட்டும் உற்பத்தியாளர்களின் அதிகாரம் உள்ளதா என்பதனைப் பரீட்சிக்காது 2024 ஆம் ஆண்டின் போது உற்பத்தியாளர்களிடமிருந்து 04 வகையான 225 டோனர்கள் ரூபா 2,702,500 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | பெறுமதி சேர் வரி பதிவுசெய்தல் சான்றிதழானது கேள்வி மதிப்பீட்டின் போது தொடர்புபடுத்திக் கொள்ளப்படாததுடன் பெறுகைத் தீர்மானத்திற்காகவும் தாக்கமளிக்காது. | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |